DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 31/2020 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | வெள்ளையம்மாள் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.07.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 16.04.2018 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. விபத்தினை ஏற்படுத்திய வாகனத்தின் இன்சூரன்ஸ் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 23.04.2018 ம் தேதியிட்ட AIR report சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மருத்துவ பில்கள் அசல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. மனுதாரரின் வங்கிக் கணக்குப் புத்தகம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**7.** மருத்துவ பில்கள் அசல் **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

1. எனக்கு விபத்து நடந்த தேதி 12.04.2018 என்றால் சரிதான். எனக்கு விபத்தை ஏற்படுத்தியது இருசக்கர வாகனம் என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தின் எண், TN 65 Q 3800 என்றால் சரிதான். விபத்தின்போது இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. காப்பீடு விபத்திற்கு அடுத்தநாள் 13.04.2018 லிருந்து 12.04.2019 வரைதான் காப்பீடு செய்யப்பட்டுள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்கு காப்பீடு இல்லாத காரணத்தினால் 3ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீட்டுத் தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.